உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.689/2023

| | |
|---|---|
| பெயர் | :செல்வமணி(அ.சா.1) |
| தகப்பனார் பெயர் | :சாத்தான் |
| கணவர் பெயர் | : |
| வயது | :46 |
| கிராமம் | :பெரியகற்பூரம்பட்டி |
| வட்டம் | :மேலூர் |
| தொழில் | :கொத்தனார் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

25.04.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கின் புகார்தாரரான காத்தம்மாள் என்னுடைய மனைவி ஆவார். எனக்கு இன்னொரு மனைவி உண்டு. அவர் பெயர் மீனா. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் என்னுடைய 2வது மனைவி மீனா தற்கொலை செய்து கொண்டார். ஆஜர் 1வது எதிரி மீனாவின் தம்பி ஆவார். ஆஜர் 2வது எதிரி செல்லப்பா மீனாவின் மாமா ஆவார். ஆஜர் 3வது எதிரி மீனாவின் மற்றொரு மாமா ஆவார். சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்னர் எனது 2வது மனைவி மீனா தற்கொலைக்கு நான் தான் காரணம் என்று ஆஜர் எதிரிகள் என்னை அடித்துவிட்டார்கள். ஆஜர் மூன்று எதிரிகளும் என்னுடைய உடம்பில் கையால் என்னை தாக்கினார்கள். வேறு ஒரு விபரமும் எனக்கு தெரியாது. சாட்சியிடம் சான்று பொருள் கத்தி காட்டப்பட்டு சாட்சி அதை நான் பார்த்ததில்லை என்று குறிப்பிடுகிறார்.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

காத்தம்மாள் என் மூத்த மனைவி ஆவார். இறந்த மீனாட்சி என்னுடைய இரண்டாவது மனைவி. கௌதம் என்பவர் என்னுடைய மகன் ஆவார். சம்பவம் நடந்ததை பற்றியும், காயம் ஏற்பட்டது பற்றியும் ஏதேனும் தெரியுமா என்றால் தெரியாது. 1வது எதிரி மீனாட்சியின் தம்பி ஆவார். 03.06.2022 அன்று காலை 6.00 மணியளவில் என் வீட்டில் தற்கொலை செய்து கொண்டார். அந்த தற்கொலைக்கு காரணம் நான் தான் என்று கூறி ஆஜர் 1வது எதிரி மற்றும் அவரது தாய்மாமா ஆகிய 2 வது 3 வது எதிரி துணையோடு என்னை கழுத்துக்கு கீழே கத்தியால் குத்தியதாகவும், எனது மகன் கத்தியை பிடுங்க முற்பட்ட போது அவருக்கு வலதுஉள்ளங்கையிலும், மோதிர விரலிலும், ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், நான் அன்று 108 ஆம்புலன்ஸ் மூலம் மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்து மேல்சிகிச்கைக்காக மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தற்போது ஆஜர் எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் ஆகிகொண்டு மேற்படி உண்மை சம்பவத்தை போலிசார் விசாரணையில் கூறிவிட்டு அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.04.25 20:33:53 +0530

Assistant Sessions Judge

Melur